ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2393/34 – 2024 ජූලි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.07.18
2393/34 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1983, செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதிய 261/3 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 222 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

எனது இல. : 03J/83/UDA/224.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : අත්1/531/(කැබලි අංක47)
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2024, யூலை 16.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், புளூமெண்டல் கிராம அலுவலர் பிரிவில், புளூமெண்டல் (பிரிவு இல. 09, புளூமெண்டல், கொழும்பு மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 520408, 2024.06.06 ஆந் திகதிய, கடத்திரல் வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்.

*01.* **துண்டு இல. 2 - சுகததாச விளையாட்டு மைதானம் - விஸ்தீரணம் : 0.1897 ஹெக்டயார்**

வடக்கு : கே. சிரில் சி பெரேரா மாவத்தை மற்றும் துண்டு இல.1 ; கிழக்கு: துண்டு இல. 1 மற்றும் ஓ. டி. ரத்நாயக்க உரிமைகோரும் கே. சிரில் சி. பெரேரா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இல. 312/3 ஐக் கொண்ட காணி மற்றும் வீதி ; தெற்கு: ஓ. டி. ரத்நாயக்க உரிமைகோரும் கே. சிரில் சி. பெரேரா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இல. 312/3 ஐக் கொண்ட காணி மற்றும் வீதி ; மேற்கு: வீதி, கே. சிரில் சி. பெரேரா மாவத்தை மற்றும் துண்டு இல. 1.

EOG 07 - 0159

1A – G 42262 – 09 (2024/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.